ரூ.10,900 இலட்சத்திற்கும், மொத்த வரையறையை ரூ.12,640 இலட்சத்திற்கும் உயர்த்த தமிழ்நாடு சட்டமன்ற மேலவை தீர்மானிக்கிறது''

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

'' தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961), 73-டி பிரிவின்கீழ் சொல்லியுள்ளவாறு, மாநில சட்டமன்றத்தின் ஒப்புதலுடன், மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி பெறும் குறுகிய கால கடன் நடுத்தரக் காலக்கடன், நடுத்தரக் கால மாற்றுவசதிக் கடன்களுக்கு அரசின் உத்தரவாத உயரளவு வரையறையை முறையே ரூ.250 இலட்சம், ரூ.1490 இலட்சம், ரூ,7400 இலட்ச அளவிற்கு கூட்டுறவுத் துறையின் 1978 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் ஒன்பதாம் நாளிட்ட 82 ஆம் எண் அரசாணையில் தமிழ்நாடு அரசு உயர்த்தியுள்ளதாலும்,

மத்திய கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்த மட்டில் நடுத்தரர கால மாற்று வசதி கடனுக்கான உயரளவு உத்தரவாத வகையுறையை ரூ.10,900 இலட்சத்திற்கு உயர்த்துவது அவசியம் ஏற்பட்டுள்ளதாலும்,

தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961) 73-டி பிரிவின்கீழ் சொல்லியுள்ளவாறு மத்திய கூட்டுறவு.வங்கிகளைப் பொறுத்த மட்டில் நடுத்தர கால மாற்று வசதிக் கடனுக்கான உத்தரவாத வரையறையை ரூ.10,900 இலட்சத்திற்கும், மொத்த வரையறையை ரூ.12,640 இலட்சத்திற்கும் உயர்த்த தமிழ்நாடு சட்டமன்ற மேலவை தீர்மானிக்கிறது.''

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(2) தமிழ்நாடு பருத்திப் போக்குவரத்து விதிகளின் வரைவுத் திருத்தத்திற்கு ஏற்பளித்தல்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

'' தமிழ்நாடு பருத்திப் போக்குவரத்து விதிகளின் 7,8-ஆவது விதிகளைத் திருத்தி, 1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்து சட்டத்தின் (மத்திய சட்டம் 3/1923) 7-வது பிரிவின்கீழ் அரசால் வெளியிடப்படவிருக்கும் கீழ்க்கண்ட வரைவு அறிவிப்பு, மேற்சொன்ன சட்டத்தின் 8-வது பிரிவில் சொல்லியுள்ளவாறு ஏற்பளிக்கப்படுவதாக.

வரைவு அறிவிப்பு.

1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 3/1923) 7-வது பிரிவின்கீழ் வழங்கப்பெற்றுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் முன்னாள் உணவு-வேளாண்மைத்துறையில் 7-12-1950 அன்று பிறப்பித்து 26-12-1950 நாளிட்ட அரசிதழின் பாகம் 1-ன் விதிகள் இணைப்பின் 575-583 பக்கங்களில் வெளியிடப்பட்ட (இது பின்னர் திருத்தப்பட்டுள்ளது) 51-ஆம் எண் அறிவிப்புடன் வெளியிடப்பட்ட விதிகளின் கீழ்க்கண்ட திருத்தங்களை இதனால் செய்கிறார். மேற்சொன்ன சட்டத்தின் 8-வது பிரிவில் சொல்லியுள்ளவாறு தமிழ்நாட்டுச் சட்டமன்றத்தின் இரு அவைகளினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மூலம் இவற்றிற்கு ஏற்பளிக்கப் பட்டுள்ளது.

திருத்தம்.

மேற்சொன்ன விதிகளில் 7-வது, 8-வது விதிகளில் 'தலைமைக் காவலர்' என்னும் சொற்கள் எங்கெல்லாம் வருகின்றனவோ அங்கெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக ''காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர்'' என்னும் சொற்கள் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்,''

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

''தமிழ்நாடு பருத்திப் போக்குவரத்து விதிகளின் 7-வது 8-வது விதிகளைத் திருத்தி, 1923-ம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 3/1923) 7-வது பிரிவின்கீழ் அரசால் வெளியிடப்படவிருக்கும் கீழ்க்கண்ட வரைவு அறிவிப்பு மேற்சொன்ன சட்டத்தின் 8-வது பிரிவில் சொல்லியுள்ளவாறு ஏற்பளிக்கப்படுவதாக.

வரைவு அறிவிப்பு.

1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 3/1923) 7-வது பிரிவின்கீழ் வழங்கப் பெற்றுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், முன்னாள் உணவு-வேளாண்மைத் துறையில் 7-12-1950 அன்று பிறப்பித்து 26—12—1950 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம் 1-ன் விதிகள் இணைப்பின் 575--583 பக்கங்களில் வெளியிடப்பட்ட (இது பின்னர் திருத்தப்பட்டுள்ளது) 51-ஆம் எண் அறிவிப்புடன் வெளியிடப்பட்ட விதிகளின் கீழ்க்கண்ட திருத்தங்களை இதனால் செய்கிறார். மேற்சொன்ன சட்டத்தின் 8-வது பிரிவில் சொல்லியுள்ளவாறு தமிழ்நாட்டு சட்ட மன்றத்தின் இரு அவைகளினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மூலம் இவற்றிற்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

திருத்தம்.

மேற்சொன்ன விதிகளில், 7-வது, 8-வது விதிகளில் 'தலைமைக் காவலர்' என்னும் சொற்கள் எங்கெல்லாம் வருகின்றனவோ அங்கெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக 'காவல்துறை சப் இன்ஸ்பெக்டர்' என்னும் சொற்கள் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.''

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

8. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, வேளாண்மை விளை பொருள் விற்பனை (திருத்தம், தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1978).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

''சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, வேளாண்மை விளைபொருள் விற்பனை (திருத்தம், தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு * (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்''

என்று முன்மொழிகிறேன்.

அதே நேரத்தில் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களையும் தங்களுடைய மேலான யோசனைகளையும் எல்லாம் சொல்ல இருக்கிறார்கள். அதற்கு முன்பாக ஒரு சில கருத்துக்களை மட்டும் நான் இங்கே சொல்வதன் மூலமாக அவர்களுக்கு உதவி செய்ய முடியும் என்கிற எண்ணத்தோடு சிலவற்றைக் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விற்பனைக் குழுவின் முன்னாள் தலைவர்களும், உறுப்பினர்களும் வேளாண்மை விளைபொருள் விற்பனையில் விவசாயிகளின் தன்மைக் காகப் போதிய ஆர்வம் காட்டவில்லை.

(பிற்பகல் 5-20)

இந்த வேளாண்மை விளைபொருள் விற்பனைக் குழுவின் முன்னாள் தலைவரும், உறுப்பினர்களும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்மைபுரிய போதிய ஆர்வம் காட்டவில்லை. விவசாய காரியங் களுக்கும், விவசாயிகளுக்கும் அவர்கள் ஊக்கம் அளிக்கவில்லை. கால

* 268-271 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பட்டுள்ளது.